துறையிலும், உள்ளூர் வேளாண்மைத் துறையிலும் தொழில் நிலை உருவாக்கத்திற்கான மதிப்பீடுகள் கிடைக்கப்பெறாமையினால் அவர்கள் உள்ளடக்கவில்லை.

அண்மைக்கால அளவீடு ஒன்றின்படி 1978ஆம் ஆண்டின் இறுதியில் ஏறக்குறைய 20,000 இலங்கையர்கள் மத்திய கிழக்கு நாடுகளில் தொழில் வாய்ப்பு பெற்றனர் என்பதை எடுத்துக் காட்டுகின்றது. இத்தகைய பயிற்றப்பட்ட ஆளணியும், பேரளவில் கல்வி கற்றவர்களும் குடிபெயர்வதினால் எழக்கூடிய பிரச்சினைகள் பற்றி கடந்த ஆண்டறிக்கை வெளிப்படுத்தியுள்ளது. அரச துறையில் மேற்கொண்ட முயற்சியின்படி பயிற்றுவிக்கப்பட்ட புதிய தொழில் நுட்பவியலாளர்கள் பற்றாக்குறையாக இருக்க அதைவிட நன்கமைந்த முறையில் செயற்படுவதற்காக தனியார் துறை போதுமான அளவு ஊக்குவிப்பை அளித்து வருகின்றது.

1978ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்ட உரையில் அறிவிக்கப்பட்டவாறு வேலையற்றிருக்கும் பல்வகையினருக்கு வருமான உதவித்திட்டத்தின் கீழ் மாதாந்த உதவிப் பணமாக ரூ. 50 ஆண்டின் இறுதிப்பகுதியிலிருந்து வழங்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் நன்மையடைவோர் ஆண்டில் இறுதியில் 37,2684 தொகையாக இருந்ததோடு ரூ. 1140 இலட்சச் செலவினையும் கொண்டிருந்தது.

கடந்த சில பத்தாண்டுகளாக வேலை தேடிவந்தோரை கிடைக்கக் கூடிய வெற்றிடங்களுக்கு அமர்த்தும் தொழிற்பாட்டை மேற்கொண்டுவந்த தொழில் இணைப்பு அலுவலகத்திற்கு பதிலாக 1978இல் தொழில் தரவுகள் வங்கித் திட்டம் உருவாக்கப்பட்டது. இப்புதிய திட்டத்தின் முக்கிய தொழிற்பாடு யாதெனின் பொது சேவைகள், அரசதுறை, உள்ளூராட்சி நிறுவனங்கள் ஆகியவற்றின் உயர் அலுவலர் பதவிக்குக் குறைவான ஊழியர்களை ஒருங்கிணைப்பதாகும்.

## வெளிநாட்டு வர்த்தகம்

தொடர்ந்து வந்த இரண்டு ஆண்டுகளிலும் ஏற்பட்ட மிகையினை அடுத்து 1978 ஆம் ஆண்டில் இலங்கையின் வர்த்தக நிலுவை (சுங்கத்தரவுகளின் அடிப்படையில்) ரூ. 14,570 இலட்சம் கொண்ட (சி.எ.உ. 980 இலட்சம்) குறையினைப் பதிவு செய்தது. சில அரச முகவர் நிலையங்கள் ஏற்றுமதி இறக்குமதிகளை காலம் கடந்த பதிவு செய்வதால் இவற்றிற்கு ஏற்ப சுங்கத்தரவுகளை சீராக்கம் செய்த விடத்து, வர்த்தக நிலுவை ரூ. 21,730 இலட்சத்தில் அமைந்து கீழ் நிலையடைந்தது.

இலங்கை ரூபாயில் பதிவு செய்யப்பட்டுள்ள தரவு ரூபாயின் பெறுமதியில் 1977ம் ஆண்டின் பின்னர் ஏற்பட்ட கணிசமான மாற்றங்களை உள்ளடக்குவதால் இலங்கை ரூபாவில் அமைந்த சுங்கத்தரவினை 1978 ஆண்டிற்கும் அதற்கு முன்னரும் உள்ள ஆண்டுகளுக்கிடையிலும் பயனுள்ள வகையில் ஒப்பு நோக்க முடியாதுள்ளது. எனவே ஒப்பு நோக்குதலிற்கு வசதி செய்வதன் பொருட்டு மிகவும் நிலையான சிறப்பு எடுப்பனவு உரிமைகளில் (சி. எ.உ.) வர்த்தகத்தரவு பகுப்பாய்வு செய்யப்படும்.

அட்டவணை 1.8

## வர்த்தக நிலுவை 1976 - 1978

பெறுமதி பத்து இலட்சம் ரூபாய்களில்
அடைப்புக் குறிக்குள் சி. எ. உ. ப. இ.

| ஆண்டு | இறக்குமதிகள் | | ஏற்றுமதிகள் | | வர்த்தக நிலுவை | |
|---|---|---|---|---|---|---|
| | சுங்கம் | சேராக்கப்பட்டது | சுங்கம் | சேராக்கப்பட்டது | சுங்கம் | சேராக்கப்பட்டது |
| 1976 | 4,645 (477) | 4,946 | 4,815 (495) | 4,840 | + 170 (+ 18) | - 106 |
| 1977 | 6,007 (630) | 6,298 | 6,638 (659) | 6,570 | + 631 (+ 29) | + 271 |
| 1978 | 14,663 (774) | 15,366 | 13,206 (676) | 13,193 | - 1,457 (- 98) | — 2,173 |

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்
உணவு ஆணையாளர் திணைக்களம்
இலங்கை வளமாக்கல் கூட்டுத்தாபனம்
பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
அரச இரத்தினக்கற் கூட்டுத்தாபனம்.

1978 ஆம் ஆண்டில் ஏற்பட்ட வர்த்தகக் குறைக்கு இறக்குமதிச் செலவில் ஏற்பட்ட 23 சதவீத கூடிய அதிகரிப்பும் ஏற்றுமதிப் பெறுமதியில் ஏற்பட்ட 3 சதவீதம் கொண்ட குறைந்த அதிகரிப்பும் காரணமாகும். இறக்குமதிகள் சி.எ.உ. 1,440 இலட்சத்தால் அதிகரிக்க, ஏற்றுமதிகள் சி.எ.உ. 170 இலட்சத்தால் அதிகரித்தது.

1977 ஆம் ஆண்டின் இறுதியில் இறக்குமதிக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதன் நேரடி விளைவே இறக்குமதிகளில் ஏற்பட்ட அதிகரிப்பாகும். இறக்குமதிகளின் அளவு, இறக்குமதி அளவு சுட்டெண்ணால் (1967=100) கணிக்கப்பட்டவாறு 1960 இற்குப் பின்னர் ஏற்பட்ட உயர்ந்த மட்டமான 27 சதவீதத்திற்கு உயர்ந்தது. ஏற்றுமதிகளில் ஏற்பட்ட மிகவும் குறைந்தளவான செயலாற்றத்திற்கு பெரும் காரணம் யாதெனில் இலங்கைக்குப் பெரும் உழைப்பினைப் பெற்றுத் தரும் தேயிலைக்கான உலகச்சந்தை விலைகள் அதன் 1977 ஆம் ஆண்டின் உச்ச மட்டங்களிலிருந்து வீழ்ச்சியடைந்தமையாகும். தெங்கின் விலைகளும் கடந்த ஆண்டை விட மிகவும் குறைவாக இருந்தன,

1977 ஆம் பொருளாதார சீர்திருத்தங்கள் உடனடியாகப் பெரும் விளைவுகளை, இறக்குமதிகளை விட ஏற்றுமதிகளில் ஏற்படுத்தியது. வழமையாக பல ஆண்டுகளாக, உரிமம், கட்டுப்பாடுகள் ஆகியவற்றிற்கு உட்பட்டிருந்த இறக்குமதிகளில் அவற்றிற்கு உயர்ந்தளவு இறக்குமதி செலவு இருந்த போதிலும் இறக்குமதிகளில் அதிகரிப்பினை எதிர்பார்க்கலாம். ஏற்றுமதிகளைப் பொறுத்தவரையில் குறுகிய காலத்தில் நிரம்பலில் விரிவின்மை காரணமாக அதிகரிப்புக்களை நடுத்தர, நீண்ட காலத்தில் மட்டுமே எதிர்பார்க்க முடியும். பெறுமதி குறைந்த செலாவணி வீதத்தின் காரணமாக வழங்கப்பட்ட ஊக்குவிப்புக்களால் ஏற்றுமதிகளில் வழமையாக காலம் தாழ்த்தியே அதிகரிப்புக்களை எதிர்பார்க்கலாம். குறிப்பாக இம் மாற்றத்

அட்டவணை 1.9

## வெளிநாட்டு வர்த்தகம் 1969 — 1978

| காலம் | பத்து இலட்சம் ரூபாய்களில் | | | சுட்டெண் 1967 = 100 | | | | வர்த்தக மாற்று விகிதம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | அளவு | | விலைகள் | | |
| | ஏற்றுமதிகள்1 (க. எ. பெ) | இறக்குமதிகள் (செ.கா.கா.) | வர்த்தக நிலுவை | எல்லா ஏற்றுமதிகளும் | எல்லா இறக்குமதிகளும் | எல்லா ஏற்றுமதிகளும் | எல்லா இறக்குமதிகளும் | |
| 1967 | 1,690 | 1,738 | –48 | 100 | 100 | 100 | 100 | 100 |
| 1968 | 2,035 | 2,173 | -138 | 103 | 101 | 117 | 126 | 93 |
| 1969 | 1,916 | 2,543 | -627 | 98 | 108 | 117 | 134 | 88 |
| 1970 | 2,033 | 2,313 | -280 | 102 | 100 | 118 | 140 | 84 |
| 1971 | 1,947 | 1,986 | –39 | 99 | 90 | 117 | 150 | 78 |
| 1972 | 2,009 | 2,064 | –55 | 97 | 88 | 118 | 157 | 75 |
| 1973 | 2,617 | 2,715 | –98 | 98 | 79 | 137 | 209 | 65 |
| 1974 | 3,471 | 4,554 | -1,082 | 85 | 56 | 217 | 370 | 58 |
| 1975 | 3,933 | 5,251 | -1.318 | 102 | 69 | 199 | 433 | 46 |
| 1976 | 4,815 | 4,645 | +170 | 97 | 75 | 239 | 383 | 62 |
| 1977 | 6,638 | 6,007 | +631 | 89 | 97 | 382 | 471 | 81 |
| 1978 | 13,206 | 14.662 | –1,456 | 95 | 132 | 698 | 877 | 80 |

1 மீள ஏற்றுமதிகளையும் உள்ளடக்கியது.

மூலங்கள்: இலங்கை சுங்கம்,
இலங்கை மத்திய வங்கி.

திற்கு முன்பு, மூன்று பெரும் மரபுவழி ஏற்றுமதிகள் குறிக்கப்பட்ட செலாவணி வீதத்திற்கு உரித்துடையனவாக இருக்கவில்லை. இவ்வழி முறையால் தேயிலை, இறப்பர், தெங்கு உற்பத்தியாளர்கட்கு வழமையாகச் சேர வேண்டிய உயர்வீத இலாபத்தினை அரசு பெற்றது. உற்பத்தி மீதான செலவினம் உயர்ந்து செல்லும் வேளையில் தேயிலை, இறப்பர், தெங்கு ஆகியவற்றின் மீதான இறக்குமதித் தீர்வைகள் மேல் நோக்கி உயர்த்தப்பட்டமை உற்பத்தியாளரின் இலாபத்தினை இல்லாது செய்வதாக அமைந்தது. எனவே சென்ற ஆண்டில் எடுத்துரைக்கப்பட்டது போல் இப்பெரும் கைத்தொழில்களுக்கான ஊக்குவிப்புக்கள் மிகவும் தேவையானதொன்றாகும். எனவே பொருளாதாரத்தின் இப்பெருந்துறை சீராக இயங்குவதன் பொருட்டு வரிகளை அடிக்கடி மீளாய்வது வேண்டியதொன்றாகும்.

### ஏற்றுமதிகள்

முன்பு கூறியது போல் 1978 இல் ஏற்றுமதி வருவாய்கள் 3 சதவீதத்தால் மட்டும் அதிகரித்தது. 1978 ஆம் ஆண்டின் மிகக் குறைந்தளவான செயலாற்றம் 1977 ஆம் ஆண்டில் ஏற்பட்ட 33 சதவீத வளர்ச்சிக்கு மாறாக அமைகிறது. பெரும் ஏற்றுமதி உழைப்பினை நல்கிய தேயிலை, இரத்தினக்கல், பெற்றோலியப் பொருட்கள் ஆகியவற்றின் பெறுமதி வீழ்ச்சியடைய இறப்பர், தெங்கு ஆகிய பொருட்களின் பெறுமதி உயர்ந்தன.

அட்டவணை 1.10

## ஏற்றுமதிகளின் உள்ளடக்கம் 1976 — 1978

| வகை | பெறுமதி ப. இ. ரூபாய்களில் அடைப்புக் குறிக்குள் சி. எ. உ. ப. இலட்சம் | | | மொத்த ஏற்றுமதிகளின் சதவீதம் | | |
|---|---|---|---|---|---|---|
| | 1976 | 1977 | 1978 | 1976 | 1977 | 1978 |
| தேயிலை ... | 2100 (216) | 3503 (355) | 6401 (327) | 44 | 53 | 48 |
| இறப்பர் . | 890 (91) | 931 (93) | 2021 (103) | 18 | 14 | 15 |
| தெங்கு .. | 382 (39) | 335 (32) | 972 (50) | 8 | 5 | 8 |
| சிறு வேளாண்மை உற்பத்திகள்* ... | 231 (24) | 378 (38) | 658 (33) | 5 | 6 | 5 |
| இரத்தினக் கற்கள் ... | 261 (27) | 298 (30) | 531 (27) | 5 | 4 | 4 |
| சிறு கைத்தொழில் ஏற்றுமதிகள்* .. | 782 (80) | 919 (86) | 1891 (97) | 16 | 14 | 14 |
| ஏனைய ஏற்றுமதிகள் ... | 170 (18) | 275 (26) | 733 (38) | 4 | 4 | 6 |
| மொத்த ஏற்றுமதிகள் ... | 4815 (495) | 6638 (659) | 13206 (676) | 100 | 100 | 100 |

* தெரிந்தெடுக்கப்பட்ட விடயங்கள். மூலம்: இலங்கைச் சங்கம்.

ஏற்றுமதி விலை 1977 இன் சி.எ.உ.1.81 இலிருந்து 1978 இல் சி.எ.உ. 1·70 இற்கு வீழ்ச்சியடைந்ததன் விளைவாக 1978 ஆம் ஆண்டில் தேயிலை ஏற்றுமதிகளின் பெறுமதி 8 சத வீதத்தால் வீழ்ச்சியடைந்தது. உற்பத்தியில் வீழ்ச்சியிருந்த போதிலும் தேயிலை ஏற்றுமதிகளின் அளவு 70 இலட்சம் கிலோக்களால் உயர்வடைந்தது. தேயிலைக்கான பன்னாட்டு விலைகள் 1977 இன் ஆண்டின் உச்சமட்டங்களிலிருந்து வீழ்ச்சியடைந்தாலும் கடந்த சில ஆண்டுகளாக விலைகள் உயர்வடைந்ததுடன் 1978 இன் மட்டங்களை விடக் கூடியதாக இருந்தன. எனவே பெருமளவில் தேயிலை உற்பத்தி செய்யும் நாடான இலங்கையில் மட்டும் கடந்த 10 ஆண்டுகளாக தேயிலை உற்பத்தி வீழ்ச்சியடைவது பற்றி மிகவும் ஆழ்ந்து நோக்குதல் வேண்டும். உண்மையில் இலங்கை பதினொன்று ஆண்டுகளுக்கு முன் 1965 ஆம் ஆண்டில் உற்பத்தியில் உச்சத்தினையடைந்த நிலையினை இன்னும் விஞ்சவில்லை. தேயிலை ஏற்றுமதி விலையில் ஏறக்குறைய 56 சதவீதத்தினை தீர்வைகள், வரிகள் ஏனைய கட்டணங்கள் ஆகியன உள்ளடக்குவது உற்பத்தியினை அதிகரிப்பதற்குப் பெரும் தடையாக உள்ளதுபோல் தோன்றுகிறது.

மறுபுறத்தில் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாக இறப்பர் ஏற்றுமதிகளின் பெறுமதி ஏறக்குறைய 14 சதவீதத்தால் அதிகரித்தது. ஏற்றுமதி செய்யப்பட்ட இறப்பரின் அளவு மிகச் சிறிதளவில் உயர்வடைந்தது. தெங்கு ஏற்றுமதிகளிலிருந்து கிடைத்த வருவாய், ஏற்றுமதி செய்யப்பட்ட அளவில் ஏற்பட்ட அதிகரிப்பால், உயர்வடைந்தது. இவ்வாறு அடைவதற்கு 1977 இன் வீழ்ச்சியுள்ள மட்டங்களிலிருந்து உற்பத்தி மீட்சி பெற்றமையே காரணமாகியது. எனினும், தெங்கின் ஏற்றுமதி விலைகள் 1978 இல் ஏறக்குறைய 18 சதவீதத்தால் காய் ஒன்றிற்குச் சமனான சி. எ. உ. 0.09 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது,

1978 ஆம் ஆண்டில் இரத்தினக்கல், பெற்றோலிய உற்பத்திகள் ஆகியவற்றிலிருந்து கிடைத்த வருவாய்கள் வீழ்ச்சியுற்றன. உள்நாட்டின் அதிகரித்த நுகர்வின் காரணமாக பெற்றோலிய உற்பத்திகளின் ஏற்றுமதிகள் ஓரளவிற்கு குறைந்தன போல் தெரிகிறது. கைத்தொழில் ஏற்றுமதிகள் (பெற்றோலிய உற்பத்திகள் இரத்தினக்கற்கள் நீங்கலாக) 1978 இல் கூடியளவிற்கு 68 சத வீதத்தால் சி.எ.உ. 490 இலட்சத்திற்கு உயர்ந்தது. இவ்வதிகரிப்பு பெரும்பாலும் உடுப்புகள், கிளிசரின், உண்ணக்கூடிய கொழுப்புக்கள், இப்பி இனவகைகள், மென்மைக் கடலுணவுகள், மட்பாண்டங்கள், பொறிகள், பொறிகளுக்குரிய கருவிகள், காரீயம் இல்மனைற்று ஆகியவற்றில் ஏற்பட்டன.

தெரிந்தெடுக்கப்பட்ட சிறுவேளாண்மை ஏற்றுமதிகள் 1977 இன் சி. எ. உ. 380 இலட்சத்திலிருந்து 1978 இல் சி.எ.உ. 340 இலட்சத்திற்கு வீழ்ந்தன. இவ்விடயப்பட்டியல்களிலிருந்த விடயங்களில் பலவற்றின் விலைகள் மிகவும் குறைந்தளவில் உயர்ந்ததுடன் பல ஆண்டுகளாக ஏற்றுமதி செய்யப்பட்ட இப்பண்டங்களின் அளவுகளும் வீழ்ச்சியடைந்தன. எனினும், சிறுவேளாண்மை ஏற்றுமதிப்பட்டியலிலிருந்து தவிர்க்கப்பட்டுள்ள கோப்பி, எள்ளு ஆகியவற்றின் ஏற்றுமதிகளிலிருந்து கிடைத்த வருவாய்கள் சென்ற ஆண்டின் மட்டத்திற்கு உயர்ந்தன.

### இறக்குமதிகள்

தாராளமாக்கலைத் தொடர்ந்து தோன்றிய இறக்குமதியின் தன்மை ஊக்கமூட்டுவதாக இருந்தது. பொருளாதாரத்தின் வளர்ச்சி வீதம் அதிகரித்துள்ளமையை எடுத்துக்காட்டும் வகையில் மூதலீட்டுப் பொருட்களின் இறக்குமதியில் கணிசமான அதிகரிப்பு காணப்பட்டது. இறக்குமதி அளவுச்சுட்டெண்ணால் (1967=(00) அளவிடப்பட்டவாறு முதலீட்டுப் பொருட்களின் அளவு என்றுமில்லாத அளவினை அடைந்து, 63 சதவீதத்தால் அதிகரித்தது. முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதியில் ஏற்பட்ட அதிகரிப்பு நீண்டகாலத் தேவையின் அடிப்படையிலேயே இப்பொருட்கள் கணிக்கப்படுவதால் வருங்காலப் பொருளாதார வளர்ச்சியில் பெரும் மாற்றத்தினை ஏற்படுத்துவதற்கானதொரு அறிகுறியாகும் இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிகள் 10 சத வீதத்தால் அதிகரித்திருக்க ஏனைய இறக்குமதிகளில் ஏற்பட்ட அதிகரிப்பினை அரிசி இறக்குமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சி பெரிதும் எதிரீடு செய்ததால், நுகர்வுப் பொருட்களின் இறக்குமதி வீழ்ச்சியடைந்தது போல் தெரிகிறது. சிறப்பு எடுப்பனவு உரிமைகளால் வகைப்படுத்தப்பட்ட வர்த்தகத்தரவினை ஆய்கையில் மொத்த இறக்குமதிகளில் மூலதனப் பொருட்களின் பங்கு 1977 இன் 12 சதவீதத்திலிருந்து 1978 ஆம் ஆண்டில் 23 சதவீதத்திற்கு உயர்வடைய, இடைநிலைப் பொருட்கள் நுகர்வுப் பொருட்கள் ஆகியவற்றின் பங்குகள் ஒவ்வொன்றும் 1978 இல் 44 சதவீதத்திலிருந்து 38 சதவீதத்திற்கு வீழ்ந்தன. நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிப் பங்கில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு பெரும் காரணியாதெனில் குறைந்தளவில் அரிசி இறக்குமதி (இது 63 சத வீதத்தால் வீழ்ந்தது) செய்யப்பட்டமையாகும்.

அட்டவணை 1.11

## இறக்குமதிகளின் மீதான செலவு 1976 — 1978

| பிரிவு | பெறுமதி பத்து இலட்சம் ரூபாய்களில் | | | பெறுமதி சி. எ. உ. பத்து இலட்சம் ரூபாய்களில் | | | மொத்த இறக்குமதிகளின் சதவீதம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1976 | 1977 | 1978* | 1979 | 1277 | 1978* | 1976 | 1977 | 1978 |
| 1. நுகர்வுப் பொருட்கள் ... | 1,689 | 2,534 | 5,593 | 174 | 270 | 287 | 36 | 42 | 38 |
| 1.1 உணவும் குடிபானமும் ... | 1,491 | 2,181 | 4,103 | 153 | 224 | 210 | 32 | 36 | 28 |
| (i) அரிசி ... | 602 | 917 | 689 | 62 | 94 | 35 | 13 | 15 | 8 |
| (ii) மா ... | 683 | 925 | 2,274 | 70 | 96 | 117 | 15 | 15 | 16 |
| (iii) சீனி .. | 64 | 197 | 514 | 7 | 19 | 26 | 1 | 3 | 4 |
| 1.2 புடவைகளும் ஆடைகளும் ... | 49 | 150 | 531 | 5 | 15 | 27 | 1 | 3 | 4 |
| 1.3 ஏனையவை ... | 149 | 203 | 959 | 16 | 31 | 50 | | | |
| 2. இடைநிலைப் பொருட்கள் ... | 2,259 | 2,648 | 5,591 | 232 | 262 | 287 | 49 | 44 | 38 |
| 2.1 பெற்றோலியம் ... | 1,164 | 1,441 | 2,402 | 120 | 141 | 123 | 25 | 24 | 16 |
| 2.2 வளமாக்கி ... | 99 | 51 | 252 | 10 | 6 | 13 | 2 | 1 | 2 |
| 2.3 இரசாயனங்கள் ... | 906 | 1,036 | 2,491 | 9 | 100 | 128 | | | |
| 3. முதலீட்டுப் பொருட்கள் .. | 641 | 746 | 3,367 | 66 | 73 | 173 | 14 | 12 | 23 |
| 3.1 பொறிகளும் கருவிகளும் | 364 | 286 | 1,845 | 37 | 33 | 95 | 8 | 5 | 13 |
| 3.3 போக்குவரத்துச் சாதனங்கள் .. | 175 | 232 | 988 | 18 | 24 | 51 | 4 | 4 | 7 |
| 3.3 கட்டடப் பொருட்கள் ... | 104 | 129 | 150 | 11 | 9 | 8 | 2 | 2 | 1 |
| 4. பாகுபடுத்தப்படாதவை .. | 54 | 79 | 110 | 6 | 25† | 29† | 1 | 1 | 1 |
| 5. மொத்தம் | 4,645 | 6,007 | 14,662 | 477 | 630 | 774 | 100 | 100 | 100 |

* தற்காலிகமானவை.

மூலம்: இலங்கைச் சுங்கம்

† 1977 நவெம்பர் 15 இற்கு பின்னர் அதற்கு முன்பு இருந்த வீதங்களைப் பயன்படுத்தி செய்யப்பட்ட கொடுக்கல் வாங்கல்களுக்காக செய்யப்பட்ட சீராக்கங்களையும் உள்ளடக்கும்.

பல ஆண்டுகளாக ஈடு செய்யப்படாது திரண்டிருந்த கேள்வியினை ஈடு செய்யும் வகையில் மூலதனப் பொருட்கள் வகுப்பில் பொறிகளும், உறுப்புக்களும், போக்குவரத்துக் கருவிகள் ஆகியவற்றின் இறக்குமதிகள் 1977ம் ஆண்டின் கட்டத்திலும் இருமடங்காக அமைந்தது. குறிப்பாக 1978 இல் சுமை வண்டிகள், வான்கள் ஆகியவற்றின் இறக்குமதிகள் நான்குமடங்காகியது.

1978 இல் நுகர்வுப் பொருட்கள் மீதான செலவு 6 சத வீதத்தால் மட்டும் உயர்வடைந்தது. 1978 இல் அரிசி தவிர்ந்த எல்லாத் துணைவகுப்பினைச் சார்ந்த நுகர்வுப் பொருட்களும் அதிகரிப்புக்களைப் பதிவு செய்தன, பாலுணவுப் பொருட்கள் புடவைகள், உந்துவண்டிகள், பல்வகை உணவுப் பொருட்கள் ஆகியவற்றின் இறக்குமதிகள் கணிசமாக உயர்வடைந்தன.

இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிகளில் இரசாயனங்கள், வளமாக்கி, தாளும், தாள் உற்பத்தி ஆகியவற்றின் மீதான செலவு உயர்வடைய பெற்றோலிய உற்பத்திகள், மா ஆகியன மீதான செலவுகள் அவற்றின் அளவுகளில் ஏற்பட்ட வீழ்ச்சியால் வீழ்ச்சியுற்றன.

வர்த்தகக் கொள்கை

1978 ஆம் ஆண்டின் வர்த்தகக் கொள்கை ஏற்றுமதிகளை ஊக்குவிப்பதினையும் உரிமம், கட்டுப்பாடுகள் ஆகியவற்றை நீக்குதலையும், தீர்வை அமைப்பினை சீர்திருத்துவதனையும் ஒட்டி அமைந்திருந்தது.

இறக்குமதிகள் மீதான தீர்வை தொடர்ந்து மீளாய்வின் கீழ் வைத்திருக்கப்பட்டதுடன் ஆண்டின் போது சில திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. குறைவான நிரம்பலினை கொண்டிருந்த பண்டங்கள், மிகவும் தேவையான நுகர்வுப் பொருட்கள், இடைநிலை, மூலதனப் பொருட்கள் ஆகியன அடங்கிய பல வகையான பொருட்கள் மீதான இறக்குமதித் தீர்வைகள் குறைக்கப்பட்டன சொகுசுப் பொருட்கள் மீதான தீர்வை சில வேளைகளில் தண்ட மட்டங்கட்கு உயர்த்தப்பட்டன. சனவரியில், குறிப்பாக நறுமணப் பொருட்கள், விரிப்புக்கள், சிகரெட்டுக்கள் ஆகியவற்றின் மீதான தீர்வை 500 சதவீதத்திற்கு உயர்த்தப்பட்டன.

அடைக்கப்பட்ட பால், குழந்தைகளுக்கும் நோயாளர்களுக்குமான பால் உணவு, பதனிடப்பட்ட இறைச்சி, விசுக்கோத்து, மரக்கறி, புரதம் புளிப்பேற்றி என்பவனவற்றை உள்ளடக்கிய நுகர்வுப் பொருட்களின் மீதான தீர்வை குறைக்கப்பட்டன. மேலும், முட்கம்பி, இரும்புப் பொருட்கள், உருக்குப் பொருட்கள், வளமாக்கி, பூச்சி கொல்லிகள் என்பனவற்றை உள்ளடக்கிய இடைநிலை பொருட்கள் மீதும், பொறிகள், பார தீசல் வண்டிகளில் அடிச்சட்டங்கள், கூரை ஓடுகள், கல் நார் தகடுகள் ஆகியவை உள்ளடக்கிய முதலீட்டுப் பொருட்கள் மீதும் தீர்வைகள் குறைக்கப்பட்டன.

ஏற்றுமதியைப் பொறுத்தவரையில் மிளகு, கராம்பு, கோப்பி, சாதிக்காய் என்பவற்றின் தீர்வைகள் முற்றாகத் தவிர்க்கப்பட்ட வேளையில் உடனடி தேயிலை, கறுவா, ஏலம், சிற்றனெல்லா எண்ணெயின் தீர்வைகள் அரைவாசியாக்கப்பட்டன. கட்டி இறப்பர் மீதான தீர்வை, ஏனைய இறப்பர் ஏற்றுமதிகளுடன் தொடர்பை மீள ஏற்படுத்துவதற்காக உயர்த்தப்பட்டது.

1977 இல் சிறப்பு இறக்குமதி உரிமைச் சான்றிதழ் எண் 1 இன் அட்டவணை 1 மேலும் திருத்தியமைக்கப்பட்டது. முன்னுரிமை உரிமத்திற்கமைய குறிப்பாக மல்லி, சீனி, வளமாக்கி, தீப்பெட்டிகள், செயற்கைப் பிசின்கள், பிளாத்திக்கு பொருட்கள், தேயிலைப் பெட்டிகளுக்கான ஒட்டுப்பலகை தட்டுகள், பெட்டிப் பலகை, சில அடிப்படை உலோகங்கள், உள்ளழுக்கும் பொறிகள் ஆகியவற்றை உள்ளடக்கிய பல பொருட்கள், அட்டவணையிலிருந்து நீக்கப்பட்டன.

பல மரபுவழியற்ற ஏற்றுமதிகள் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டிலிருந்து அகற்றப்பட்டன. இருபத்தொரு பொருட்களைத் தவிர்ந்த ஏனையவற்றிற்குத் தேவையான முன்னுரிமை ஏற்றுமதி உரிமம் பெறல் நீக்கப்பட்டது. மீளப் பயன்படுத்த முடியாத மூலவளங்களைப் பாதுகாத்தல் குறிப்பாக நுகர்வு தேவைகளுக்கு உதவுதல், சூழ்நிலைகளைப் பாதுகாத்தல், நாட்டின் இயற்கையைப் பாதுகாத்தல் ஆகிய நோக்கங்களுக்காக இச் சில பொருட்கள் உரிமம் பெறுதலின் கீழ் அடக்கப்படுகின்றன.

இவ்வாண்டில் ஏற்றுமதிகளை ஊக்குவிக்கும் மூகமாகப் பல நடவடிக்கைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. வேளாண்மை பயிர்களை மீளப்பயிரிடல், புதிதாகப் பயிரிடல் என்பவற்றிற்காகத் தொடர்ந்திருக்கும் உதவு தொகை திட்டங்கள் மேல் நோக்கி திருத்தியமைக்கப்பட்டன. 1978 இல் வியாபார நோக்கங்களுக்கான வெளிநாட்டுச் செலாவணியின் வழங்கல் குறிப்பிடத்தக்களவு அதிகரிக்கப்பட்டுள்ளது. ஏற்றுமதியைக் கருத்தாகக் கொண்ட வெளிநாட்டு மூலதனங்களைக் கவரும் முகமாக 'ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயங்களை' ஏற்படுத்துவதற்காக கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழு நிறுவப்பட்டது. 1968 இல் இம்மாதிரியான கைத்தொழில்களைத் தொடங்குவதற்காக 52 ஒப்புதல்கள் வழங்கப்பட்டன.

தற்போது நடைமுறைப்படுத்தலில் இருக்கும் (1979 இல் அறிமுகப்படுத்தப்பட்டது) இன்னுமொரு ஏற்றுமதியை ஊக்குவிக்கும் குறிப்பிடத்தக்க நடவடிக்கையானது ஏற்றுமதி கொடுகடன் உத்தரவாதக் கூட்டுத்தாபனமாகும். இக்கூட்டுத்தாபனம் ஏற்றுமதியாளர்கள் தாராள அடிப்படையில் வங்கி நிதியைப் பெறுவதற்கு உதவியும், வெளிநாட்டு நுகர்வாளர்களினல் ஏற்படும் கால தாமதமான கொடுப்பனவுகள் அல்லது கொடுப்பனவுகள் இல்லாமை ஆகியவற்றினல் ஏற்றுமதியாளர்களுக்கு ஏற்படும் இடர்களுக்குப் பாதுகாப்பும் கொடுக்கும். அமைச்சர்களின் ஏற்றுமதி அபிவிருத்திச்சபை, ஏற்றுமதி அபிவிருத்திச் சபை ஆகியவற்றை நிறுவும் மூகமான சட்டவாக்கங்கள் ஆக்க நிலையிலுள்ளன. ஏற்றுமதி அபிவிருத்திக்குத் தேவையான உரிமைகளை இச்சபை கொண்டிருக்கும்.

## சென்மதி நிலுவை[1]

1978 ஆம் ஆண்டின் சென்மதி நிலுவையின் செயலாற்றம் 1977 ஆம் ஆண்டின் பொருளாதாரச் சீர்திருத்தங்களிலேயே பெரிதும் தங்கியிருந்தது. சென்மதி நிலுவையில் இவ்வழிமுறைகள் ஏற்படுத்திய உடனடித்தாக்கத்தை

1. சென்மதி நிலுவையில் பயன்படுத்தப்பட்ட வர்த்தகத் தரவுகள், அந்த ஆண்டின் உண்மைப் பெறுகைகளாகும். இவை முன்னர் தரப்பட்ட, இறக்குமதி ஏற்றுமதிகளின் அசைவைப் பிரதிபலிக்கும் வெளிநாட்டு வர்த்தகத் தரவுகளில் இருந்து வேறுபட்டதாகும். இவ்வேறுபாடு ஒரு புறத்தில் பெறுகைகளுக்கும், கொடுப்பனவுகளுக்கும் இடையிலான கால தடங்கல்களினலும் மறுபுறம், பொருட்களின் இயல்பான் அசைவினலும் ஏற்படுவதாகும்,